*ஜூன் 12, 2015*

**ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது**

இனிமையான குழந்தாய், விவேகம் மற்றும் சாரத்தின் சமநிலை மூலம் உரிமைக்கான உணர்வுகளை அற்பணம் செய்யும் ஒர் உலக மாற்றத்தை கொண்டுவருபவர்கள் ஆகுவீர்களாக. விவேகம் என்றால் ஞானக் கருத்துகளும் புரிந்துக்கொள்வதும் என்று பொருள்படும். சாரம் என்றால் அனைத்து சக்திகளின் ஸ்ரூபமாகவும் நினைவின் ஸ்வரூபமாகவும் ஒர் சக்தி வாய்ந்த வடிவத்தை கொண்டிருப்பதும் ஆகும்.

இனிமையான பாபா, நாள் பொழுதில் நான் இந்த விழிப்புணர்வை மீண்டும் உறுதி செய்துக்கொள்கின்றேன்: நான் ஒவ்வொரு சிந்தனை, சொல் மற்றும் செயலை உங்கள் நினைவு மற்றும் ஞானத்தினால் நிரப்பும்போது, நான் எளிதாக முழு உலகின் சுற்றுச்சூழலையும் மாற்றமுடியும்.

**சமார்த்தி அல்லது சக்தி**

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

**மனோ-விருத்தி அல்லது மனோபாவம்**

பாபா ஆத்மாவிற்கு: இந்த உலகம் அழுக்கானதாக இருக்கின்றது. உங்களுக்கு அதில் எல்லையற்ற விருப்பமின்மை இருக்க வேண்டும். தந்தை கூறுகின்றார்: நீங்கள் இந்த உலகில் இப்போது பார்க்கும் எதுவும் நாளை இருக்காது. உண்மையில் தந்தையை தவிர வேறு எதிலும் எந்த மதிப்பும் இல்லை.

நான் இந்த பழைய உலகில் எல்லையற்ற விருப்பமின்மை கொண்டிருப்பதில் உறுதியாக இருக்கிறேன். இந்த நேரத்தில், நித்தியமானதும் தூய்மையானதும் மட்டுமே மதிப்பு நிறைந்ததாக இருக்கின்றது. என்னுடைய வாழ்க்கையில் ஆக உயர்ந்த மதிப்பு கொண்டது பாபாவின் சகவாசம், வழிகாட்டல், மற்றும் தூய அன்பு ஆகும்.

**திருஷ்டி அல்லது தூயப் பார்வை**

பாபா ஆத்மாவிற்கு: இனிமையான குழந்தைகளே, நீங்கள் இப்போது புதிய உறவுமுறைகளில் நுழைகின்றீர்கள். எனவே, கர்மப் பந்தனங்களின் அடிப்படையில் இங்கே உள்ள உங்கள் உறவுகளை மறந்து, கர்மாதீத் ஆக முயற்சி செய்யுங்கள்.

இன்று என்னுடைய திருஷ்டியில், நான் மற்றவர்களை கடந்த கால கர்ம வரலாறின் அடிப்படையில் பார்ப்பதை விட்டுவிடுகின்றேன். நான் ஒவ்வொரு உறவுமுறையும்

புதியது என்றும் தெய்வீக ஒளியால் நிரப்பப்பட்டிருக்கிறது என்று ஒவ்வொரு ஆத்மாவையும் சுத்தமான கண்களால் பார்க்கின்றேன்.

**ஓர் அலையை உருவாக்குதல்**

*நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஓர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.*